**செ.வெ.எண்:39** **நாள்:16.08.2019**

# அரியலூர் மாவட்டத்தில் காவேரி டெல்டா பகுதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு தூர் வரும் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் தூர் வாரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.டி.ஜி.வினய், இஆப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், தூத்தூர், காமரசவல்லி மற்றும் ஏலாக்குறிச்சி ஆகிய காவேரி டெல்டா பகுதிகளில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதாரத்துறையின் சார்பில் புள்ளம்பாடி வாய்க்காலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு தூர் வரும் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் தூர்வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது:-**

புள்ளம்பாடி பிரதான வாய்க்கால் திருச்சி மாவட்டம் காவேரி இடது கரையில் காவேரி மேலனையில் அய்யாறு இடது கரையிலிருந்து பிரிகிறது. இதன் மொத்தம் நீளம் 89.66 கி.மீட்டாப் ஆகும். இது மானோடை, ஆண்டிஓடை, வேட்டக்குடி ஏரிகள் வழியாக வந்து இருதியில் சுக்கிரன் ஏரியில் கலக்கிறது. இவ்வாய்க்காலின் மூலம் மொத்தம் 22,144 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெருகின்றன. இவ்வாய்க்கால்கள் 28 ஏரிகளுக்கு தண்ணீர் ஆதாரமாக உள்ளது.

மேலும், இந்த வாய்க்கால் மூலமாக அரியலூர் மாவட்டத்திற்கு 25 ஏரிகளும், திருச்சி மாவட்டத்திற்கு 3 ஏரிகளும் பாசனம் பெறுகிறது. புள்ளம்பாடி வாய்க்கால் பாசன பகுதிகளில் தூர் வாரும் பணிகள் மூலம் சுக்கிரன் ஏரி மதகு வாய்க்கால்கள் மற்றும் அரசன் ஏரி, வழங்கு வாய்க்கால்கள், தூத்தூர் ஏரி வழங்கு வாய்காகல்கள் மற்றும் சுக்கிரன் ஏரியில் பாசன பகுதிகளில் வடிகாலான ஆணைவாரி ஓடை ஆகமொத்தம் 32.8 கி.மீட்டர் தூரத்திற்கு ரூ.57 இலட்சம் செலவில் பணிகள் விரைவாக நடைபெற்றுகொண்டிருக்கின்றன என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, உதவி செயற்பொறியாளர்கள் இராமலிங்கம், சிவக்குமார் (திருச்சி) மற்றும் பாசனதாரர் சங்க உறுப்பினர்கள், விவசாயிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**